# "கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் - ஓர் ஆய்வு"

LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

திரு. ஆதம்பாவா முஹம்மது முபாறக்
சுட்டெண்: PGS/2005/MA(T)/15

MA20
Thesis
Library - EUSL

மொழித்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை - செங்கலடி,
இலங்கை.

2005 / 2006

PROCESSED
Main Library, EUSL

# முகவுரை

இவ்வாய்வுக் கட்டுரையானது, கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி ஆய்வு செய்வதாக அமைகின்றது. முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்து வரும் இப்பிரதேச மக்களிடையே வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. ஒப்பீட்டளவில் ஆண்களைவிட குறைந்தளவான முஸ்லிம் பெண்கள் இப்பிரதேசத்திலிருந்து இலக்கியப் பங்களிப்புச் செய்திருக்கின்ற போதும், தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவம் பெற்ற முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் இப்பிரதேசத்தில் வாழ்கின்றனர்.

இதுவரையிலும் அம்பாரை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள ஆய்வுகளை நோக்கும்போது, அவ்வாய்வுகள் கல்முனைப் பிரதேசத்தை மட்டும் களமாகக் கொண்டு அமையவில்லை. அதனால் கல்முனைப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி அவர்களது ஆக்கங்களை வெளிக்கொணர்வது இவ்வாய்வின் முதல் நோக்கமாக அமைந்துள்ளது.

கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை ஆகிய ஆக்கங்களை எழுதியிருக்கின்ற போதும், இவ்வாய்வானது கட்டுரைப் பகுதியைத் தவிர்த்து ஏனைய இலக்கியங்களை மட்டும் ஆய்வு செய்கின்றது. பொதுவாக இலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனைகள் வெளிவரத் தொடங்கியது 1980களின் பிற்பாடாகும். அதனால் இவ்வாய்வும் வசதி கருதி 1985 - 2007 ஆம் ஆண்டு வரைக்குட்பட்ட காலப் பகுதிகளில் கல்முனைப் பிரதேசத்திலிருந்து பெயர் குறிப்பிடுமளவுக்கு எழுதி வந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வாக அமைந்துள்ளது.

ஆய்வுக்குரிய ஆதாரங்களாக கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களும் எழுத்தாளர்களின் நூல்களும் பதிவு நாடாக்களும், ஈழத்திலும் தமிழகத்திலும் இப்பிரதேச எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவும் ஆதாரங்களாக அமைகின்றன.

இவ்வாய்வு கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, அதனைத் தொடர்ந்து அவர்களது இலக்கியங்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது. இலக்கியங்களைப் பொருள் ரீதியாக நோக்கும் இவ்வாய்வானது முதலாவது வரிசையில் கவிதை எழுதியவர்களையும் சிறுகதைகள் எழுதியவர்களையும் அறிமுகப்படுத்துகிறது. தொடர்ந்து நாவல், நாடகம் ஆகியவற்றை எழுதிய எழுத்தாளர்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது.

இவ்வாய்வுக் கட்டுரையானது நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாம் இயல், ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம் எழுத்தாளர்கள் வகிக்கும் இடத்தையும், அவர்களது கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்றவற்றைத் தனித்தனியே அறிமுகப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

இரண்டாவது இயல், கல்முனைப் பிரதேச அறிமுகம், கல்வி, தொழில், சனத்தொகை பற்றிய விபரம், அப்பிரதேசப் பண்பாடுகள், கல்முனைப் பிரதேச எழுத்தாளர்கள் பற்றிய விளக்கம் என்பனவற்றைத் தருகிறது.

மூன்றாவது இயல், கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் அறிமுகத்தோடு அவர்களது கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என்பவற்றினூடாக வெளிப்படும் சீதனம், காதல், அரசியல், சமயம், சமூகம் சார்ந்த விடயங்கள் என்பன பற்றியதாக அமைந்துள்ளது.

நான்காவது இயல், கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்களில் உள்ளடக்கப்படும் விடயங்கள், அவர்கள் எழுத்துலகில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள், ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அவ்வெழுத்தாளர்கள் வகிக்கும் இடம் என்பனவற்றைக் கூறுகிறது.

இறுதியாக, உசாத்துணை நூற்பட்டியல், பின்னிணைப்பு, விளக்கப்படம் என்பனவும் இடம்பெறுகிறது.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | i - ii |
| முகவுரை | iii - iv |
| பொருளடக்கம் | v - ix |
| ஆய்வுச் சுருக்கம் | 1 - 2 |

**அத்தியாயம் ஒன்று**

| | |
|---|---|
| 1.0 ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம் எழுத்தாளர்கள் | 3 - 6 |
| 1.1 நாவல் இலக்கிய வளர்ச்சி | 6 - 8 |
| 1.2 சிறுகதை இலக்கிய வளர்ச்சி | 8 - 11 |
| 1.3 கவிதை இலக்கிய வளர்ச்சி | 11 - 14 |
| 1.4 நாடக இலக்கிய வளர்ச்சி | 14 - 16 |

**அத்தியாயம் இரண்டு**

| | |
|---|---|
| 2.0 கல்முனைப் பிரதேச முஸ்லிம் எழுத்தாளர்கள் | |
| 2.1 பிரதேச அறிமுகம் | 17 |
| 2.1.1 கல்முனை என்ற பெயர் வந்த வரலாறு | 17 |
| 2.1.2 பிரதேச செயலாளர் பிரிவுகள் | 17 |
| 2.1.2.1 கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவு | 18 - 19 |
| 2.1.2.2 சாய்ந்தமருதுப் பிரதேச செயலாளர் பிரிவு | 19 - 20 |
| 2.1.3 பண்பாட்டம்சங்கள் | 20 - 21 |
| 2.1.3.1 திருமணம் | 21 - 23 |
| 2.1.3.2 சடங்குகள் | 23 - 24 |
| 2.2 இலக்கிய வளர்ச்சி | 25 |
| 2.3 முஸ்லிம் எழுத்தாளர்கள் | 25 - 32 |

## அத்தியாயம் மூன்று


| | |
|---|---|
| 3.0 முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் | 33 - 35 |
| 3.1 கலைமகள் ஹிதாயா ரிஸ்வி | 36 - 37 |
| 3.1.1 கவிதைகள் | 37 |
| 3.1.1.1 சீதனக் கொடுமை | 38 - 39 |
| 3.1.1.2 காதல் தொடர்பானவை | 40 - 42 |
| 3.1.2.3 சமயம் தொடர்பானவை | 42 - 45 |
| 3.1.1.4 இஸ்லாமியப் பண்பாடு தொடர்பானவை | 45 - 46 |
| 3.1.1.5 அரசியல், மற்றும் போர் தொடர்பானவை | 46 - 48 |
| 3.1.1.6 சமூகம் தொடர்பானவை | 48 - 58 |
| 3.1.1.7 ஏனையவை | 50 - 53 |
| 3.1.2 சிறுகதைகள் | 53 - 54 |
| 3.1.2.1 சீதனப் பிரச்சினைகள் | 54 - 57 |
| 3.1.2.2 காதல் உணர்வு சார்ந்தவை | 57 - 59 |
| 3.1.2.3 ஏனையவை | 59 - 69 |
| 3.2 இஸ்ஸத் ரிஹானா அஸீம் (அனார்) | 61 |
| 3.2.1 கவிதைகள் | 61 - 62 |
| 3.2.1.1 காதல் தொடர்பானவை | 62 - 69 |
| 3.2.1.2 சீதனக் கொடுமை தொடர்பானவை | 69 - 71 |
| 3.2.1.3 பெண்களது மனவெளிப்பாடுகளும், அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் | 72 - 80 |
| 3.2.1.4 அரசியல், மற்றும் போர்ச் சூழல் தொடர்பானவை | 80 - 83 |
| 3.2.1.5 ஏனையவை | 83 - 85 |
| 3.2.2 சிறுகதைகள் | 85 - 88 |

| | |
|---|---|
| 3.3 சுல்பிகா இஸ்மாயில் | 88 - 89 |
| 3.3.1 கவிதைகள் | 89 |
| 3.3.1.1 காதல் தொடர்பானவை | 89 - 93 |
| 3.3.1.2 பெண்களது மனவெளிப்பாடுகளும், அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் | 93 - 101 |
| 3.3.1.3 அரசியல், மற்றும் போர்ச் சூழல் தொடர்பானவை | 102 - 106 |
| 3.3.1.4 ஏனையவை | 106 - 107 |
| 3.4 சுல்பிகா ஷரீப் | 107 - 108 |
| 3.4.1 கவிதைகள் | 108 |
| 3.4.1.1 சீதனக் கொடுமையும், பெண்களுக்கு எதிரான அநீதிகளும் | 109 - 112 |
| 3.4.1.2 காதல் தொடர்பானவை | 112 - 113 |
| 3.4.1.3 ஏனையவை | 113 - 114 |
| 3.5 ஹஸீனா வஹாப் | 114 - 115 |
| 3.5.1 குறுங்கதைகள் அல்லது ஒரு பக்கக் கதைகள் | 115 - 120 |
| 3.5.2 குறுநாவல் | 120 - 123 |
| 3.6 முஹம்மது இப்றாகிம் சித்தி பௌசியா | 123 |
| 3.6.1 கவிதைகள் | 124 - 126 |
| 3.7 சபானா ஜுனைதீன் | 126 - 127 |
| 3.7.1 கவிதைகள் | 127 - 130 |
| 3.7.2 சிறுகதைகள் | 130 - 134 |
| 3.7.3 நாடகங்கள் | 134 - 141 |

## அத்தியாயம் நான்கு


4.0 மதிப்பீடு 142

4.1 உள்ளடக்கம் 142

4.2 வகைகள் (தெரிவு) 142

4.3 கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் எழுத்துலகில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் 142 - 143

4.3.1 குடும்பக் காரணிகள் 144 - 145

4.3.2 சமூக, சமயக் காரணிகள் 145 - 148

4.4 தீர்வுகள் 149 - 150

4.5 ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கல்முனைப் பிரதேச முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு 151 - 153

ஆய்வுக்கு உதவிய நூல்கள் 154 - 156

ஆய்வுக்கு உதவிய பத்திரிகைகள் 157 - 159

ஆய்வுக்கு உதவிய சஞ்சிகைகள் 160

பின்னிணைப்பு 161 - 199